**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாந் தவணைப் பரீட்சை 2018**
**நாடகமும் அரங்கியலும்**

**தரம் 11 சுட்டெண்:…………………… நேரம் : 3 மணித்தியாலங்கள்**

## பகுதி 1

கவனிக்க வேண்டியவை

i எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

ii தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான

1. நாடகமொன்றின் பிரதான படைப்பாளர்
   (1) எழுத்துாளர் (2) நடிகர் (3) நெறியாளரர் (4) பார்ப்போர்

2. 'நாட்டிய' என்ற வடசொல்லின் கருத்து
   (1) நடனம் (2) இலக்கியம் (3) நாடகம் (4) நடனப்பெண்

3. அரங்கு என்ற சொல்லின் மிகப் பொருத்தமான கருத்து
   (1) நாடகம் நடைபெறும் மேடை (2) ஆற்றுகை அனைத்தினதும் செயல்தொகுதி
   (2) பார்க்கும் இடம் (4) நிரந்தரமாக கல்லால் அமைக்கப்பட்ட மேடை

4. மேடை நாடகமொன்றுக்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்குமான வேறுபாடாக கொள்ளக்கூடியது.
   (1) கட்புல செவிப்புல வடிவம் (2) மனிதப் பிரச்சனைகளைப் பேசும்
   (2) பாத்திரந்தாங்கல் இடம்பெறும் (4) பார்ப்போரை உடன் எதிர்கொள்ளும்

5. 'நாடகம' என்ற சிங்கள நாடகத்திற்குப் பயன்படுத்துப்படும் அரங்கு
   (1) கரலிய (2) தானயம்பல (3) களத்துமேடு (4) வட்டக்களரி

6. 'வாசாப்பு' நிகழ்த்துப்படும் பிரதேசம்
   (1) யாழ்ப்பாணம் (2) மன்னார் (3) மலையகம் (4) மட்டக்களப்பு

7. 'உடுக்கு' வாத்தியத்தினை பிரதான இசைக்கருவியாகக்கொண்டு ஆடப்படும் கூத்துமரபு
   (1) காமன்கூத்து (2) காத்தவராஜன் கூத்து (3) வசந்தன்கூத்து (4) மகிடிக்கூத்து

8. பின்வரும் அரங்க விளையாட்டுக்களில் வெற்றி தோல்வியின்றி விளையாடக்கூடிய அரங்க விளையாட்டு
   (1) ஆடும் வீடும் (2) நண்டு றால் மீன்
   (2) சின்னப் பானை பெரிய பானை (4) கந்தையாண்ண சொல்லுகிறார்

9. பின்வருவனவற்றில் ‘ஆக்கும் கலையாகக்’ கொள்ளப்படக்கூடியது
(1) நாடகம் (2) நடனம் (3) சிற்பம் (4) சொற்பொழிவு

10. ஆரோடு நோகேன் நாடகம் முதன்முதலில் எழுதி மேடயேற்றப்பட்டது
(1) நாடக அரங்க கல்லூபரிக்காக (2) புனித ஜோண்பொஸகோ பாடசாலை
(2) சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (4) வசாவிளான் மத்திய கல்லூரிக்காக

11. சிறுவர் அரங்கு தொடர்பான மிகவும் பொருத்தமான கூற்று
(1) விலங்குப்பாத்திரங்களை கொண்ட கதையமைப்பு
(2) சிறுவர்களால் நடிக்கப்படுவது
(3) பாடல்களைக் கொண்டிருத்தல்
(4) சிறுவரின் வயதுக்கேற்ற விருப்பு வெறுப்புக்ளை அனுசரிப்பது

12. ‘ஆரொடு நோகேன்’ நாடகத்தில் ராஜ்குமார் -செல்வராணி தம்பதிகளுக்களின் பிள்ளைகள்
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஒன்று

13. ஏழு மலட்டு ராணிகளுடன் தொடர்புபடுகின்ற சிங்கள சடங்கு
(1) தொவில் (2) ரட்டயக்கும (3) சொக்கரி (4) சன்னியக்கும

14. ஆரொடு நோகேன் நாடகத்தில வருகின்ற துணைக்கதை
(1) பரமார்த்த குரு கதை (2) முருகன் விநாயகர் மாம்பழக்கதை
(2) அம்புலிமாமா கதை (4) கிழக்கு வாசல் திரைப்படக்கதை

15. பின் வருவனவற்றில் கதை தளுவி ஆடப்படாத கூத்து
(1) காத்தவராஜன் கூத்து (2) கோவலன் கூத்து
(3) தென்மோடிக்கூத்து (4) பறைமேளக்கூத்து

16. தற்காலத்தில் ஒப்பனையில் முகப்பூச்சுக்கப் பயன்படுத்தப்படும் ஒப்பனைப்பொருள்
(1) அரிதாரம் (2) முத்துவெள்ளை (3) பான் கேக் (4) மரச்சாயம்

17. முதல்முதலாக ‘ஒளியை’ அரங்கின் கலை நுட்பமாக மாற்றிய நெறியாளர்
(1) தோமஸ் அல்வா எடிசன் (2) அடோல் அப்பியா (3) பிரக்ட் (4) பீற்றர்புறூக்

18. மேடைமுழுவதிலும் ஒளியை பிரயோகிப்பதற்கு ஏற்ற ஒளி முதல்
(1) பொட்டொளி விளக்கு (2) ஒளிவெள்ள விளக்கு
(3) இலக்கு விளக்கு (4) சிறப்பு விளக்கு

19. ஈழத்தில் சொல்லாடல் நாடக மரபினை பிக்ஞைபூர்வமாக அறிமுகம் செய்தவர்
(1) க.சொர்ணலிங்கம் (2) ம.சண்முகலிங்கம்
(3) நா. சுந்தரலிங்கம் (4) க.கணபதிப்பிள்ளை

20. ‘பொறுத்தது போதும்’ நாடகத்தின் ஆசிரியர்
(1) முருகையன் (2) தாசீசியஸ் (3).சிவானந்தன் (4).பிரான்சிஸ் ஜெனம்

21. வடமோடிக்கூத்தின் வடிவத்திற்குள் முதன்முதலாக சமூகப்பிரச்சினையை உட்புகுத்திய நாடகம்
(1) கந்தன் கருணை (2) அற்றைத் திங்கள் (3) சங்காரம் (4) சக்தி பிறக்குது.

22. பின்வருவனவற்றில் தெருவெளி நாடகம்
(1) மாயமான் (2) அபசுரம் (3) மழை (4) ஆர்கொலோ சதுரர்

23. பின்வருவனவற்றில் புதியதொரு நாடகப் பாத்திரங்களை மட்டும் கொண்ட பாத்திரத்தொகுதி
(1) மாயன் மயிலி,பெரிய நயினார்,பேரண்டச்சி
(2) மாசிலன்,மன்னவன், மறைக்காடர்,மரியான்
(3) மயிலி,மன்னவன்,மாசிலன்,மறைக்காடர்
(4) ஆரணி,ரஞ்சித்குமார்,ஷீலா,.ராஜதுரை

24. A "செத்தாய் எனவே இருந்தோம் திரும்பிவிட்டாய்"
B "உத்தமியின் மேலே ஒருகுற்றமும் எண்ணாதீர்"
C "குற்றத்தை யாருக்குப் பிரித்து கொடுக்கலாம் என்பதல்ல ஐயா"

மேற்காணப்படுகின்ற உரையாடலோடு தொடர்புடைய பாத்திரங்கள் முறையே
(1) மாசிலன், மாயன், மையுண்ட நெடுங்கண்ணாத்தை
(2) மையுண்ட நெடுங்கண்ணாத்தை, மறைக்காடர், மாசிலன்
(3) மையுண்ட நெடுங்கண்ணாத்தை, மறைக்காடர், மாயன்
(4) மறைக்காடர்,மையுண்ட நெடுங்கண்ணாத்தை, மாயன்

25. ஆற்றுகை என்ற அரங்கியல் சஞ்சிகையை வெளியிட்ட நிறுவனம்
(1) நாடக அரங்க கல்லூரி (2) செயற்திறன் அரங்க இயக்கம்
(2) வெறுவெளி அரங்கக்குழு (4) திருமறைக்கலாமன்றம்

26. நாடகமொன்று ஆரம்பிக்கும் போது அது ஆரம்பிக்கம் 'கணத்தினை' முடிவு செய்பவர்
(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர் (3) மேடை முகாமையாளர் (4) நடிகர்

27. மனித மாடு என்ற சிறுகதையை எழுதியவர்
(1) அ.செ. முருகானந்தன் (2) வ. இராசரத்தினம் (3) டானியல் (4) செங்கை ஆழியான்

28. புதியதொரு வீடு நாடகத்தில் பயன்படுத்தப்படும் "கட்டுமரம் ஏலே ஏலோ தோணியுண்டு ஏலைஏலை.." என்ற மீனவத் தொழிலோடு தொடர்புடைய தொழிற்பாடல்
(1) கப்பல் பாடல் (2) அம்பாப்பாடல் (3) நலங்குப்பாடல் (4) வேடிக்கைப்பாடல்

29. 'வடஇலங்கை நாட்டார் அரங்கு' என்ற ஆய்வு நூலின் ஆசிரியர்
(1) கா. சிவத்தம்பி (2) சி.மௌன குரு
(3) காரை.செ.சுந்தரம்பிள்ளை (4) சு. வித்தியானந்தன்

30. ஈழத்தின் அரங்க நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட கால ஒழுங்கில் அமைந்திருப்பது

(1) நாடக அரங்க கல்லூரி, நடிகர் ஒன்றியம், லங்கா சுபோத விலாச சபை

(2) நடிகர் ஒன்றியம், நாடக அரங்க கல்லூரி,லங்காசுபோத விலாச சபை

(3) நாடக அரங்க கல்லூரி ,லங்கா சுபோத விலாச சபை,நடிகர் ஒன்றியம்

(4) ,லங்கா சுபோத விலாச சபை, நடிகர் ஒன்றியம், நாடக அரங்க கல்லூரி

31. புதியதொரு வீடு நாடகத்தில் மாயனுக்கு மரணச்சடங்கொன்றினை நினைவுபடுத்தும் ஒலி விளைவு

(1) கோவில் மணி (2) ஆந்தை அலறும் சத்தம்
(3) ஒப்பாரி ஓசை (4) நாய் குலைக்கும் ஓசை

32. ஆரோடு நோகேன் நாடகத்தில் வருகின்ற பிரதான பாத்திரங்களின் வேட உடை

(1) குறியிட்டுப்பண்புடன் காணப்படும் (2) யதார்த்தமானதாகக் காணப்படும்
(3) மோடித்தன்மையுடன் காணப்படும் (4) ஆடம்பரமானதாகக் காணப்படும்

33. நாடக விமர்சனம் ஒன்றின் பிரதான பணி

(1) நிறைகளைக்கூறுதல் (2) குறைகளைக்கூறுதல்
(3) விமர்சகரின் திறமையைக்காட்டுதல் (4) குறைநிறைகளைக்கூறி வழிப்படுத்தல்

34.



இப்படத்தில் காட்டுப்பட்டுள்ள சடங்கு

(1) சூரன் போர் (2) மானம்பூ
(3) குளிர்த்தி (4) வனவாசம்

35.



படத்தில் காட்ப்பட்டுள்ள இந்திய நாடக வகை

(1) கதகளி (2) குச்சுப்புடி
(3) தெருக்கூத்து (4) ரஸலீலா



இவ்வரங்கில் பாரப்போரின் இருப்பு

(1) நாலுபுறமும் அமையும்


(2) மூன்று புறம் அமையும்

(3) ஒருபுறமாக அமையும்

(4) இரண்டு பக்கமாக அமையும்

கீழே A B C D ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் படங்களை ஆதாரமாகக்கொண்டு 37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.?



A B C D

37. புதியதொரு வீடு நாடகத்தினை எழுதத்தூண்டி அதனை நெறியாள்கை செய்தவர்

(1) A (2) B (3) C (4) D

38. இருட்டினில் குருட்டாட்டம் நாடகத்தினை எழுதியதுடன் பாடசாலை அரங்கில் தீவிரமாக செயற்பட்டு வந்தவர்

(1) A (2) B (3) C (4) D

39. மக்கள் களரி அமைப்பின் தாபகர்

(1) A (2) B (3) C (4) D

40. ஈழத்தின் புகழ்பூத்த இசை நாடகக் கலைஞன்

(1) A (2) B (3) C (4) D

(40X 1 = 40 புள்ளிகள்)

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை 2018**
**நாடகமும் அரங்கியலும்**

**தரம் 11 சுட்டெண்:…………………… நேரம் : 3 மணித்தியாலங்கள்**

## நாடகமும் அரங்கியலும் பகுதி II

***முதலாம் வினாவையும் வேறு ஏதாவது நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.***

1.சுருக்கமான விடை எழுதுக.?

(i) கூத்துக்களில் 'காலமேற்றுதல்' என்பதனால் கருதப்படுவது யாது.?

(ii) 'கதாசிஸ்' என்பது எந்த நாட்டில் பார்ப்போரின் ரசனை வெளிப்பாடாக இருந்தது.?

(iii) அரங்கின் ஒளியூட்டலில் ஒளியை கட்டுப்படுத்தும் கருவி எப் பெயரினால் அழைக்கப்படுகின்றது.?

(iv) கலையரசு சொர்ணலிங்கம் யாரை தனது குருவாக கொண்டு செயற்பட்டார்?

(v) 'புதிதளித்தல்' என்றால் என்ன.?

(vi) 'முல்லை மோடி' என அழைக்கப்படும் கூத்துமரபு யாது?

(vii) 'கோலம்' நாடகம் நிகழ்த்துப்படும் அரங்கவெளி எப்பெயரில் வழங்கப்பெறுகின்றது.?

(viii) இன்று சர்வதேச அளவில் தமிழில் வெளிவரும் 'அரங்கியல் இதழ்' ஒன்றின் பெயர் தருக?

(ix) நாடகமாக நிகழும் சடங்குகள் இரண்டு தருக தருக?

(x) அரங்கில் இசையின் இரண்டு பணிகளை தருக? (12.புள்ளிகள்)

2. (i) 'நாடகம்' 'அரங்கு' ஆகியவற்றுக்கான தொடர்பினை விளக்குக? (4 புள்ளிகள்)

(ii) மேடை நாடகமானது

(அ) வானொலி நாடகம்

(ஆ) தொலைக்காட்சி நாடகம்

ஆகியவற்றில் இருந்து எவ்வாறு வேறு படுகின்றது என்பதனை தனித்தனியே சுருக்கமாக விளக்குக. (8.புள்ளிகள்)

3. (i) ஈழத்தில் கூத்துக்கள் நிகழ்த்தப்படும் பிரதேசங்களையும் வகைகளையும் பட்டியலிடுக.? (4 புள்ளிகள்)

(ii) கூத்து வடிவங்களுக்கிடையேயான பொதுப் பண்புகளை தருக? (4புள்ளிகள்)

(iii) தற்காலத்தில் கூத்துக்கலையின் நிலை பற்றிய உமது அவதானிப்பினை எழுதுக.? (4.புள்ளிகள்)

4. நாடகமொன்றின் உருவாக்கத்தில் ஈடுபடும் பின்வரும் கலைஞர்களின் பணிகளை சுருக்கமாகத்தருக.?

(i) நெறியாளர்

(ii) அரங்க முகாமையாளர்

(iii) ஒப்பனையாளர் (4x3=12புள்ளிகள்)

5. (i) அரங்கப் பயிற்சி என்றால் என்ன? (2புள்ளிகள்)

(ii) நடிகனுக்கான திறன்கள் **நான்கினையும்** பண்புகள் **நான்கினையும்** தருக? (4.புள்ளிகள்)

(iii) நீர் அண்மையில் நடித்த நாடகமொன்றின் நடிப்பு அனுபவங்களை எழுதுக.? (6புள்ளிகள்)

6. (i) ஆரோடு நோகேன் நாடகத்தின் பிரதான கதைக்கரு யாது ? (2.புள்ளிகள்)

(ii) அக்கருவிவினை வெளிப்படுத்துப்படும் நாடகத்தின் கதைகள் **இரண்டு** தருக ? (2.புள்ளிகள்)

(iii) இந் நாடகத்தில் வருகின்ற தந்தையர்களான **ரஞ்சித்குமார், ராஜ்குமார்** ஆகிய பாத்திரங்களின் பண்புகளை ஒப்பிடுக.? (4.புள்ளிகள்)

(iv) இந்நாடகம் கூறும் பிரச்சினை இக்காலத்திற்கும் பொருத்தமானதா என்பதனை ஆராய்க. ? (4.புள்ளிகள்)

7. (i) நாடக எழுத்துருவின் கூறுகளை எழுதுக ? (3புள்ளிகள்)

(ii) சிறுகதை ஒன்றினை நாடகமாக்கும் படிமுறை ஒன்றினை தருக? (3.புள்ளிகள்)

(iii) நீர் அண்மையில் வாசித்த சிறுகதை ஒன்றினை நாடகமாக எழுதுக? (6புள்ளிகள்)